செய்தி வெளியீடு எண்:304 நாள் : 25.06.2015

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.6.2015) தலைமைச் செயலகத்தில், சவூதி அரேபியா நாட்டில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது சுட்டுக் கொல்லப்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் திரு. மதிவளன் அவர்களின் மனைவி திருமதி எஸ்.மேரி பெல்லாஜி அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

சவூதி அரேபியா நாட்டில் உள்ள தனியாருக்குச் சொந்தமான மீன்பிடி நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வந்த கன்னியாகுமரி மாவட்டம், பொழிக்கரை கிராமத்தினை சேர்ந்த திரு. சிலுவை என்பவரின் மகன் திரு. மதிவளன், 29.5.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த ஏழு மீனவர்களுடன் சவூதி அரேபியா நாட்டின் கடல் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அகால மரணமடைந்த மீனவர் திரு. மதிவளன் அவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு, மரணமடைந்த திரு. மதிவளனின் உடலை அவரது சொந்த ஊருக்கு விரைவில் கொண்டு வரவும், அவர் பணிபுரிந்த நிறுவனத்திடமிருந்து அவரது குடும்பத்திற்கு இறுதி பணப் பயன்களை பெற்றுதர இந்திய தூதரகத்தின் மூலமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் பாரதப் பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். மேலும், அம்மீனவர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று 31.5.2015 அன்று அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, உயிரிழந்த மீனவர் திரு. மதிவளன் அவர்களின் மனைவி திருமதி எஸ்.மேரி பெல்லாஜி அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து காசோலையைப் பெற்றுக் கொண்ட திரு. மதிவளன் அவர்களின் மனைவி திருமதி எஸ்.மேரி பெல்லாஜி, தங்களது ஏழ்மையான குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கருணையுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 லட்சம் ரூபாய் வழங்கியமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 25.6.2015**